## மஹாவலி கென்ஷல்ரன்சி பியூரோ (பிறைவேட்) லிமிட்டட் கம்பனி – 2018

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹாவலி கென்ஷல்ரன்சி பியூரோ (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் ("கம்பனி") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் முன்தெனி ஆறு அபிவிருத்திச் செயற்திட்டம் என்பவற்றிடமிருந்து பெறவேண்டிய முறையே ரூபா 11,791,614 மற்றும் ரூபா 908,000 தொகைகள் பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து கம்பனிக்கு புதிய செயற்திட்டங்களை பெற்றுக்கொள்ளுதல் நிறுத்தப்பட்டதன் அடிப்படையில் கம்பனியின் வருமானம் குறைவடைந்து நிதி நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதியில் மேற்குறிப்பிட்ட விலைப்பட்டியல் மீதான வரிக் கிரயத்தை தாங்கிக்கொள்வதற்கு கம்பனியால் முடியாதிருந்தது. | பெறவேண்டிய வருமானத்தை சரியாக கணக்கீடு செய்வதற்கான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் பணிக்கொடை மிகை ஏற்பாடு ரூபா 1,609,567 மீளாய்வாண்டின் இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | 2019 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 03 நிலையான வைப்புக்களிற்குரிய ரூபா 1,284,697 பெறவேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டிப் பெறுமதியை சரியாக இனங்காண முடியாதிருந்தமை மற்றும் அதனடிப்படையில் செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் வரியின் குறித்துரைக்கப்பட்ட தொகையை இனங்கண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப முடியாதிருந்தது. இதற்கு மேலதிகமாக மூன்று மாத காலப்பகுதிக்கான நிலையான வைப்பு முதலீடு முதிர்வடைந்திருக்காதமை மேலும் குறிப்பிடப்படுகின்றது. | நிலையான வைப்புக்களிற்காக பெறவேண்டிய வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.2 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை**

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் செயற்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 3,058,326 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்படட்ட நிலையான சொத்துக்கள் மேலும் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதற்கிணங்க மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 3,058,326 தொகையான நிலையான சொத்துக்களின் கிரயம் 2017 திசெம்பர் 31 இல் முடியவடைந்த ஆண்டில் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான செயற்திறனான ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலையான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு சீராக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | நேரொத்த ஏட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | வருமானம் | 90,203,907 | 48,899,419 | 41,304,488 | நிதி நெருக்கடி காரணமாக ஆண்டின் இறுதியில் மேற்குறிப்பிட்டட விலைப்பட்டியல் பெறுமதிக்கான வரித் தொகை மிகவும் உயர்வாக காணப்பட்டது, கம்பனி இதனை வழங்குவதற்கு முடியாதிருந்தது என்பதை நான் குறிப்பிடுகின்றேன். | நிதிக் கூற்றுக்களில் உள்ள பெறுமதிகள் வரி மதிப்பீட்டு அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுமதி சேர் வரிப் பொறுப்பு | 3,748,751 | 1,862,322 | 1,886,429 | 2018 ஆம் நிதியாண்டிற்குரிய பெறவேண்டிய வரிப் பொறுப்பு 2018 ஆம் ஆண்டின் இறுதிக் | நிதிக் கூற்றுக்களில் உள்ள பெறுமதிகள் வரி மதிப்பீட்டு |

| | | |
|---|---|---|
| | காலாண்டளவில் காசாக பெறப்படாததன் காரணமாக நான்காவது காலாண்டு மதிப்பீட்டு அறிக்கையில் பதிவு செய்யப்படாதிருந்தது . | அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,273,787 தொகை மற்றும் 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான ரூபா 6,016,484 தொகையான பிடித்துவைத்தல் பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,762,118 தொகையான ஏனைய நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட நிறுத்தி வைத்தல் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக உரிய தரப்பினர்களிற்கு நினைவூட்டப்பட்டிருந்ததுடன் அம் மீதிகளை விரைவாக தீர்ப்பனவு செய்வதற்கும் இன்னமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத நிறுத்தி வைத்தல் பணம் வருமானமாக இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது. | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கொங்கிறீட்டின் 32 கியூபிக் மீற்றர்களிற்காக ரூபா 462,572 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாணம் தொடரப்படாததன் காரணமாக கம்பனியால் பெறப்பட்டிருக்காத 11.5 கியூபிக் மீற்றர்களிற்கான ரூபா 177,319 தொகை கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கூறுவிலைகள் விடயத்தில் கொங்கிறீட் விநியோகஸ்தரின் நிபந்தனையின் பிரகாரம் கட்டளையிடப்பட்ட அளவு செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பெறப்படாத கொங்கிறீட்டிற்கான தொகையை மீளச் செலுத்துவதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்படுகின்றன. | பெறவேண்டிய மீதிகளை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 166,039 தொகையான 8 ஆண்டுகளிற்கு மேலாக செலுத்த வேண்டிய தேசிய பாதுகாப்பு வரி, ரூபா 8,410,207 தொகையான 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் ரூபா 2,454,530 தொகையான 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ஏனைய நிலுவை மீதிகள் என்பன தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இவ் மீதிகள் நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியாக காட்டப்பட்டிருந்த போதிலும் உரிய பெறவேண்டிய தரப்பினர்கள் அதனை அறவீடு செய்ய வேண்டிய மீதியாக உறுதிப்படுத்தியிருக்கவில்லை. எனினும் விரைவாக இது தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்படுகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 757 | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2015 யூன் 17 ஆம் திகதிய பீஈடி 03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தி | கம்பனியின் “F” வகைப்படுத்தலின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்துடைய கம்பனிகளின் தலைவர்களின் மாதாந்த படிகளை பெற்றுக்கொள்வதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரை மற்றும் கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் நிதி அமைச்சின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டிய | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கம்பனியின் தலைவரால் பெறப்பட்டிருந்த முறையே ரூபா 790,460, ரூபா 877,242 மற்றும் ரூபா 1,094,183 படிகளிற்காக பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வரைபு வருடாந்த அறிக்கையை விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 4,690,880 இலாபமொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 3,625,207 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 1,065,673 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நிர்வாகக் கிரயங்கள் குறைவடைந்தமையே இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணேவல அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை கம்பனி இரத்துச் செய்திருந்தது. அதற்கிணங்க, ரூபா 1,730,055 மற்றும் ரூபா 1,000,089 தொகையான செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண பிணை என்பன மீளளிக்கப்படாததால் கம்பனிக்கு ரூபா 2,730,144 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் நிர்மாண செயன்முன்னேற்றத்தின் 25 சதவீதமாக உள்ள ரூபா 849,744 தொகையான 10 கேற்கள் (gates) மற்றும் ரூபா 562,941 தொகையான வயர்கள் (wires) கொள்வனவு | காலநிலை மற்றும் வானிலை மாற்றம் காரணமாக வெள்ள நிலைமை ஏற்பட்டமை மற்றும் அதனடிப்படையில் மேலதிக கிரயங்கள் ஏற்பட்டமை காரணமாக செயற்திட்டம் நட்டமடைதல் மற்றும் ஒப்பந்தக் காலப்பகுதி காலாவதியாகுதல் காரணமாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 1,730,055 தொகையான செயலாற்றல் பிணை மாத்திரம் காணப்பட்டது.<br><br>வேலை ஆரம்பித்தல் நிறுத்தப்பட்டதால் இக் கேற்களை நிறுவுவதற்கு முன்னர் வேலைத்தளம் மூடப்பட்டிருந்தது. ஆனால் கட்டளையிடப்பட்ட | உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தன. அச் செலவினம் விளைவற்ற செலவினமாக காணப்பட்டது. | கேற்களை வேலைத்தளத்திற்கு போக்குவரத்துச் செய்யும் நோக்கம் காணப்பட்டதுடன் வேலைத்தளம் நிறுத்தப்பட்டதாக பிரதம பொறியியலாளரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் வேலைத்தளத்திற்கானது நிறுத்தப்பட்டு அக் கேற்கள் நிறுவன வளாகத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.<br><br>இவ் வயர் இருப்பு ஏனைய நிர்மாண வேலைகளிற்கு பயன்படுத்தப்படலாம் அல்லது வேறுவகையில் முறைமையொன்றின் பிரகாரம் இது அகற்றப்படும் என்பதனை நான் அறிவிக்க விரும்புகின்றேன். | |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அமுல்ப்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்குகின்ற செயல்நடவடிக்கைத் திட்டம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்ட மாதிரிக்கிணங்க செயன்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் கம்பனியின் பௌதீக செயன்முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். | பெறுகைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்படாததுடன் ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கம்பனிப் பதவியணியினரின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் தகைமைகளின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2018 யூன் மாதத்தின் போது எங்களது கம்பனியை கலைப்பதற்கு இலங்கை மஹாவலி அதிகாரசபையின் தாய்க் கம்பனியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் கம்பனியில் புதிய வணிகச் செயற்திட்டங்களை பெற்றுக்கொள்வதை நிறுத்துவதற்கும் பதவியணியினரிற்கான ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் சம்பள அதிகரிப்புக்களை நிறுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இலங்கை மஹாவலி அதிகாரசபையால் அவ்வாறு அறிவுறுத்தப்பட்டதால் குறித்துரைக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளை (எஸ்ஓஆர்) வழங்க முடியாதிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரிப்பதற்கு படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |